செ.வெ.எண் :17 நாள்:16.06.2020

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**சிறந்த சமூக தொண்டு புரிந்து வரும் நிறுவனம் மற்றும் சிறந்த சமூக சேவை புரிந்த பெண்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எதிர்வரும் 15.8.2020 அன்று வழங்கப்படும் விருது பெற விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில், சிறந்த சமூக தொண்டு புரிந்து வரும் நிறுவனத்திற்கும், மற்றும் சிறந்த சமூக சேவை புரிந்த பெண்களுக்கான விருதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எதிர்வரும் 15.8.2020 அன்று வழங்கப்பட உள்ளது.

மேற்படி விருது பெறுவதற்கு, தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டும், 18-வயதுக்கு மேற்பட்டவராகவும், குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள் சமூகநலன் சார்ந்த நடவடிக்கைகள், பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை, மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணியாற்றியவராகவும், சமூக சேவை நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறப்பாக சேவை புரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி விருதினை பெறுவதற்கு நாகப்பட்டினம் மாவட்டத்தில் தகுதியான தொண்டு நிறுவனம் மற்றும் சமூக சேவை புரிந்த பெண்கள் இருப்பின் அவர்கள் மாவட்ட சமூகநல அலுவலகத்தை நேரில் தொடர்புக்கொண்டு அதற்கான விண்ணப்பப்படிவத்தினை பெற்று தேவையான ஆவணங்கள் மற்றும் புகைப்படத்துடன், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தனித்தனியாக பூர்த்தி செய்து மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், நாகப்பட்டினம், என்ற முகவரிக்கு 18.6.2020 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைத்திட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்**